தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 16, திருவள்ளுவர் ஆண்டு 2049
2018 மே 30, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.”

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***22687—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, மத்திகோடு ஊராட்சிப் பகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், தான் எடுத்த காரியங்கள் அனைத்திலும் மக்களின் பேராதரவோடு வெற்றி மேல் வெற்றி பெற்று சாதனைகள் புரிந்துவரும் மக்களின் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, அவருக்குத் தோளோடு தோள் நிற்கும் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை இல்லை. கேள்விக்கு பதில். (சிரிப்பு)*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *கேள்விக்கு பதிலைத் தருகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, மத்திகோடு ஊராட்சியில் மத்திகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வந்தது. இச்சங்கம் சரியாக செயல்படாத காரணத்தினால், அருகிலுள்ள கருங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்துடன் 1983 ஆம் ஆண்டு ஜனவரியில் இணைக்கப்பட்டது. மத்திகோடு ஊராட்சியின் மொத்த நிலப்பரப்பு 363.97 ஹெக்டேர்தான். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 300 ஹெக்டேர் மட்டுமே. எனவே, ஏற்கெனவே உள்ள அரசின் விதிகளின்படி, மத்திகோடு ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.